**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.309/2025
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : வேலுச்சாமி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கணபதி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

12.03.2026

(1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

1. நான் சத்திரக்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் கீழத்தூவல் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது 12.10.2024ம் தேதி எனக்கு ரோந்து அலுவல் பணி ஒதுக்கப்பட்டிருந்ததால் நானும் நிலைய தலைமைக்காவலர்–607 பூமுருகன் என்பவரும் முதல் நிலைக்காவலர் 2182 மணிகண்டன் ஆகியோரும் சேர்ந்து 14.00 மணிக்கு நிலையத்தில் இருந்து கிளம்பி மது விலக்கு சம்மந்தமாக திருவரங்கம் சுடுகாடு ஏரிய அருகில் ரோந்து சென்றபோது எனக்கு சுடுகாடு அருகே இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சந்தேகப்படும் படியாக அவர்களில் எதிரி சகத்கத்துல்லா சாக்குபையை கையில் வைத்துக்கொண்டு நின்றார்கள். போலீஸ் பார்டி சகிதம் அவர்களை பிடித்து அவர்களில் எதிரி சகத்கத்துல்லா வைத்திருந்த சாக்குபையை சோதனையிட்டபோது அதில் தலா சுமார் 180ML அளவுள்ள Monitor Brandy பாட்டில்கள் 25 இருந்தன.

**2.** அவைகளை குறித்து விசாரித்தபோது எதிரி சகத்கத்துல்லா என்னிடம் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் சுய இலாபத்திற்காக அரசு மதுபானக்கடையில் வாங்கி விற்பனைக்காக வைத்திருப்பதாகக் கூறினார். அதனால் அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் சென்ற போலீசார் முன்னிலையில் எதிரிகளை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து அவர்கள் வைத்திருந்த 25 மதுபாட்டில்களை

14.40 மணிக்கு மகஜரில் கைப்பற்றி அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துடன் எதிரிகளை 15.10 மணிக்கு நிலையம் அழைத்து வந்து அவர்கள் மீது நிலைய குற்ற எண்.155/2024 சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தக்க பிணையத்தில் விடுவித்தேன். தலைமைக்காவலர்–607 பூமுருகன் மற்றும் முதல் நிலைக்காவலர் 2182 மணிகண்டன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம்–91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பி.ஆர்.எண்.204/2025 பெற்றேன். அந்த **படிவம்–91 அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **சுமார் 180ML அளவுள்ள மதுவுடன் கூடிய Monitor Brandy 25 பாட்டில்கள் அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் அத்துடன் வழக்கின் விசாரணையை 12.10.2024ம் தேதியன்று முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP Act– ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அன்றைய தினம் ரோந்து அலுவல் சென்றது குறித்து பொது நாட்குறிப்பேட்டில் பதிவுகள் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் எதிரிகளை சாக்குபையுடன் பார்த்ததாக சொல்லப்படுகிற நிலையில் அவர்களில் எதிரி சகத்கத்துல்லா வைத்திருந்ததாக சொல்லப்படுகிற சாக்குப்பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

2. சட்டப்படி ஒரு எதிரிகளிடமிருந்து சோதனையோ, கைப்பற்றுதலோ செய்ய வேண்டும் என்றால் அதை வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். ஆனால் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வீடியோ பதிவு செய்யாததால் எதிரிகளிடமிருந்து தடயம் கைப்பற்றியதாக சொல்லப்படுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மதியம் 02.00 மணி என்பதால் அப்போது டாஸ்மாக்

கடை திறந்து இருக்கும் என்றால் சரிதான். மேலும் நான் கூறியபடி மதுபானங்கள் கைப்பற்றப்பட்டிருந்தால் அதை பொது மக்கள் முன்னிலையில் கைப்பற்றியிருப்பேன் என்றாலும் எனக்கு கீழ் பணிபுரியும் போலீசாரை வைத்து நானே நிலையத்தில் ஆவணங்களை தயார் செய்துவிட்டு புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.